ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

## ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை




### ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# திருவாய்மொழி நூற்றந்தாதி

### ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி தனியன்

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா |
தஸ்ய தாஶரதே: பாதௌ ஶிரஸா தாரயாம்யஹம் ||

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே கூரேஸாயநம:
ஸ்ரீ தாஸரதி மஹாகுரவே நம: ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம: ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை

**வர்தமான ஸ்வாமி ஸ்ரீ உ.வே.கோ.க.வா.அ.**
**குமார ராமாநுஜாசார்யர்**



**வர்த்தமான ஸ்வாமி தனியன்**

ஸ்ரீமத் வதூல குல வாரிதி பூர்ண சந்த்ரம்
வாதூல வேங்கட குரூத்தம புத்ர ரத்நம் |
ஸ்ரீசைல தேஶிக க்ருபாப்த ஸமஸ்த போதம்
ராமாநுஜார்ய குருவர்ய மஹம் ப்ரபத்யே ||

ஸ்ரீவேங்கடார்ய தநயம் தத்பாத கமலாஶ்ரயம் |
வாதூலாந்வய பூர்ணேந்தும் ராமாநுஜ குரும் பஜே ||

| | |
|---|---|
| **Swami Mudaliandan Thirumaligai**<br>4/345, Sannadhi Street,<br>**Singaperumal Koil**,<br>Chenglpet District,<br>Tamil Nadu, India. PIN 603 204 | **Swami Mudaliandan Thirumaligai**<br>73, East Chithra St,<br>**Srirangam**, Trichy,<br>Tamil Nadu, India. PIN 620 006 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>51, Sannadhi Street,<br>**Kancheepuram**,<br>Tamil Nadu, India. Pin 631 501 | **Swami Mudaliandan Thirumaligai**<br>**Thirunarayanapuram**,<br>Karnataka, India. PIN 571 431 |
| **Swami Mudaliandan Thirumaligai**<br>Next to Theerthavaari Mandapam,<br>Vaazhai Kulam Street,<br>**Srivilliputhur**,<br>Tamil Nadu, India. PIN 626 125 | **Swami Mudaliandan Thirumaligai**<br>Sannadhi Street,<br>**Kooram**10 KM from Kancheepuram,<br>Tamil Nadu, India. PIN 631 558 |


**E Mail:** sridasarathy@gmail.com, acharya@mudaliandan.com
**Website:** www.mudaliandan.com
**Phone:** 91711 12050 , 96294 18994

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:　　ஸ்ரீமதே கூரேஶாயநம:
ஸ்ரீ தாஶரதி மஹாகுரவே நம:　　ஸ்ரீமத் வரவர முநயே நம:
ஸ்ரீ வானாத்ரி யோகிநே நம:　　ஸ்ரீ வேங்கட குரவே நம:
அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்

## ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# திருவாய்மொழி நூற்றந்தாதி

## தனியன்கள்

அல்லும் பகலும் அனுபவிப்பார் தங்களுக்குச் *
சொல்லும் பொருளும் தொகுத்துரைத்தான் * - நல்ல
மணவாள மாமுனிவன் மாறன் மறைக்குத் *
தணவா நூற்றந்தாதி தான்

மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிவன் *
தன்னருளால் உட்பொருள்கள் தன்னுடனே சொன்ன
திருவாய்மொழி நூற்றந்தாதியாம் தேனை *
ஒருவா தருந்து நெஞ்சே உற்று *

**ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**

___________

## ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# திருவாய்மொழி நூற்றந்தாதி

‡ உயர்வே பரன்படியை * உள்ளதெல்லாம் தான் கண்டு *
உயர்வேதம் நேர்கொண்டுரைத்து ** மயர்வேதும்
வாராமல் * மானிடரை வாழ்விக்கும் மாறன் சொல் *
வேராகவே விளையும் வீடு

‡ வீடுசெய்து மற்றெவையும் * மிக்கபுகழ் நாரணன் தாள் *
நாடு நலத்தாலடைய நன்குரைக்கும் ** நீடு புகழ்
வண்குருகூர் மாறன் * இந்த மாநிலத்தோர் தாம் வாழப் *
பண்புடனே பாடியருள் பத்து

பத்துடையோர்க்கென்றும் * பரனெளியனாம் பிறப்பால் *
முத்திதரும் மாநிலத்தீர்! மூண்டவன் பால் ** பத்தி செய்யும்
என்றுரைத்த * மாறன்தனின் சொல்லால்போம் * நெடுகச்
சென்ற பிறப்பாமஞ்சிறை

அஞ்சிறைய புட்கள்தமை * ஆழியானுக்கு * நீர்
என்செயலைச் சொல்லும் என விரைந்து ** விஞ்ச
நலங்கியதும் மாறன் இங்கே * நாயகனைத் தேடி *
மலங்கியதும் பத்தி வளம்

வளமிக்க மால் பெருமை * மன்னுயிரின் தண்மை *
உளமுற்றங் கூடுருவ வோர்ந்து ** தளர்வுற்று
நீங்க நினை மாறனை மால் * நீடிலகு சீலத்தால் *
பாங்குடனே சேர்த்தான் பரிந்து

பரிவதில் ஈசன் படியைப் * பண்புடனே பேசி *
அரியனலன் ஆராதனைக்கென்று ** உரிமையுடன்
ஓதியருள் மாறன் * ஒழிவித்தான் இவ்வுலகில் *
பேதையர்கள் தங்கள் பிறப்பு

பிறவியுற்று நீள்விசும்பில் * பேரின்பம் உய்க்கும் *
திறமளிக்கும் சீலத்திருமால் ** அறவினியன்
பற்றும் அவர்க்கென்று * பகர் மாறன் பாதமே *
உற்ற துணையென்று உள்ளமே! ஓடு

ஓடுமனம் செய்கை * உரை ஒன்றி நில்லாதருடனே *
கூடி நெடுமால் அடிமைகொள்ளும் நிலை ** நாடறிய
ஓர்ந்தவன்தன் செம்மை * உரை செய்த மாறனென *
ஏய்ந்து நிற்கும் வாழ்வாம் இவை

இவையறிந்தோர் தம்மளவில் * ஈசன் உவந்தாற்ற *
அவயங்கள் தோறு மணையும் சுவையதனைப்
பெற்று ** ஆர்வத்தால் மாறன் * பேசின சொல் பேச * மால்
பொன்தாள் நம் சென்னி பொரும்

பொருமாழி சங்குடையோன் * பூதலத்தே வந்து *
தருமாறோரேதுவறத் தன்னைத் ** திரமாகப்
பார்த்துரை செய் மாறன் * பதம் பணிக என் சென்னி *
வாழ்த்திடுக என்னுடைய வாய்

வாயும் திருமால் மறைய நிற்க * ஆற்றாமை
போய் விஞ்சி மிக்க புலம்புலதாய் ** ஆய
அறியாதவற்றோடு * அணைந்தழுத மாறன் *
செறிவாரை நோக்கும் திணிந்து*

திண்ணிதா மாறன் * திருமால் பரத்துவத்தை *
நண்ணியவதாரத்தே நன்குரைத்த ** வண்ணமறிந்து
அற்றார்கள் யாவர் * அவரடிக்கே யாங்கவர் பால் *
உற்றாரை மேலிடா தூன்

ஊனமறவே வந்து * உள்கலந்த மாலினிமை
ஆனது * அனுபவித்தற்காம் துணையா ** வானில்
அடியார் குழாம் கூட * ஆசையுற்ற மாறன் *
அடியாருடன் நெஞ்சே! ஆடு

ஆடிமகிழ்வானில் * அடியார் குழாங்களுடன் *
கூடி இன்பம் எய்தாக் குறையதனால் ** வாடி மிக
அன்புற்றார்தம் நிலைமை * ஆய்ந்துரைக்க மோகித்துத் *
துன்புற்றான் மாறன் அந்தோ!

அந்தாமத்தன்பால் * அடியார்களோடிறைவன் *
வந்தாரத்தான் கலந்த வண்மையினால் ** சந்தாபம்
தீர்ந்த * சடகோபன் திருவடிக்கே நெஞ்சமே! *
வாய்ந்தவன்பை நாடோறும் வை

வைகுந்தன் வந்து * கலந்ததற்பின் வாழ் மாறன் *
செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து ** நைகின்ற
தன்மைதனைக் கண்டு * உன்னைத்தான் விடேன் என்றுரைக்க *
வன்மையடைந்தான் கேசவன்

கேசவனால் எந்தமர்கள் * கீழ்மேல் எழுபிறப்பும் *
தேசமடைந்தாரென்று சிறந்துரைத்த ** வீசுபுகழ்
மாறன் மலரடியே * மன்னுயிர்க்கெல்லாம் உய்கைக்கு *
ஆரென்று நெஞ்சே! அணை

அணைந்தவர்கள் தம்முடனே * ஆயனருட்காளாம் *
குணந்தனையே கொண்டுலகைக் கூட்ட ** இணங்கி மிக
மாசில் உபதேசம் செய் * மாறன் மலரடியே *
வீசு புகழ் எம்மா வீடு

எம்மா வீடும் வேண்டா * என்தனக்குன் தாளிணையே *
அம்மா வமையுமென வாய்ந்துரைத்த ** நம்முடைய
வாழ் முதலாம் மாறன் * மலர்த்தாளிணை சூடிக் *
கீழ்மையற்று நெஞ்சே! கிளர்

‡ கிளரொளிசேர் * கீழுரைத்த பேறு கிடைக்க *
வளரொளிமால் சோலை மலைக்கே ** தளர்வறவே
நெஞ்சைவைத்துச் சேருமெனும் * நீடுபுகழ் மாறன் தாள் *
முன் செலுத்துவோம் எம்முடி

முடியார் திருமலையில் * மூண்டு நின்ற மாறன் *
அடிவாரந்தன்னில் அழகர் வடிவழகைப்
பற்றி ** முடியும் அடியும் படிகலனும் *
முற்றும் அனுபவித்தான் முன்

முன்னம் அழகர் எழில் * மூழ்கும் குருகையர் கோன் *
இன்ன வளவென்ன எனக்கரிதாய்த் தென்ன **
கரணக் குறையின் கலக்கத்தைக் * கண்ணன்
ஒருமைப் படுத்தான் ஒழித்து

‡ ஒழிவிலாக்காலம் * உடனாகி மன்னி *
வழுவிலாவாட்செய்ய மாலுக்கு ** எழுசிகர
வேங்கடத்துப் பாரித்த * மிக்க நலம் சேர் மாறன் *
பூங்கழலை நெஞ்சே! புகழ்

புகழொன்று மால் எப்பொருள்களும் தானாய் *
நிகழ்கின்ற நேர்காட்டி நிற்க ** மகிழ்மாறன்
எங்கும் அடிமைசெய்ய * இச்சித்து வாசிகமாய் *
அங்கடிமை செய்தான் மொய்ம்பால்

மொய்ம்பாரும் மாலுக்கு * முன்னடிமை செய்துவப்பால் *
அன்பால் ஆட்செய்பவரை ஆதரித்தும் ** அன்பிலா
மூடரை நிந்தித்தும் * மொழிந்தருளும் மாறன் பால் *
தேடரிய பத்தி நெஞ்சே! செய்

செய்ய பரத்துவமாய்ச் * சீரார் வியூகமாய்த் *
துய்ய விபவமாய்த் தோன்றிவற்றுள் ** எய்துமவர்க்கு
இந்நிலத்தில் * அர்ச்சாவதாரம் எளிதென்றான் *
பன்னு தமிழ் மாறன் பயின்று

பயிலும் திருமால் பதம் தன்னில் * நெஞ்சம்
தயலுண்டு நிற்கும் ததியர்க்கு ** இயலுடனே
ஆளானார்க்கு ஆளாகும் * மாறன் அடியதனில் *
ஆளாகார் சன்மம் முடியா

முடியாத வாசைமிக * முற்று கரணங்கள் *
அடியார் தம்மை விட்டவன் பால் படியா **
ஒன்றொன்றின் செயல் விரும்ப * உள்ளதெல்லாம் தாம் விரும்பத் *
துன்னியதே மாறன் தன் சொல்

சொன்னாவில் வாழ் புலவீர்! * சோறு கூறைக்காக *
மன்னாத மானிடரை வாழ்த்துதலால் என்னாகும்? **
என்னுடனே மாதவனை * ஏத்துமெனும் குருகூர் *
மன்னருளால் மாறும் சன்மம்

சன்மம் பல செய்து * தான் இவ்வுலகளிக்கும் *
நன்மையுடைய மால் குணத்தை நாள் தோறும் ** இம்மையிலே
ஏத்தும் இன்பம் பெற்றேன் * எனு மாறனை உலகீர் *
நாத்தழும்ப ஏத்தும் ஒரு நாள்

ஒருநாயகமாய் உலகுக்கு * வானோர்
இருநாட்டில் ஏறியுய்க்கும் இன்பம் திரமாகா **
மன்னுயிர்ப் போகம் தீது * மாலடிமையே இனிதாம் *
பன்னியிவை மாறனுரைப்பால்

பாலரைப் போல் சீழ்கிப் * பரனளவில் வேட்கையால் *
காலத்தால் தேசத்தால் கைகழிந்து ** சால
அரிதான போகத்தில் * ஆசையுற்று நைந்தான் *
குருகூரில் வந்துதித்த கோ

கோவான ஈசன் * குறையெல்லாம் தீரவே *
ஓவாத காலத்து வாதிதனை ** மேவிக்
கழித்தடையக் காட்டிக் * கலந்த குண மாறன் *
வழுத்துதலால் வாழ்ந்ததிந்த மண்

மண்ணுலகில் முன் கலந்து * மால் பிரிகையால் * மாறன்
பெண்ணிலைமையாய்க் காதல் பித்தேறி ** எண்ணிடில் முன்
போலி முதலான பொருளை * அவனாய் நினைந்து *
மேல்விழுந்தான் மையல் தனின் வீறு

வீற்றிருக்கும்மால் விண்ணில் * மிக்கமயல் தன்னை *
ஆற்றுதற்காத் தன்பெருமையான தெல்லாம் ** தோற்றவந்து
நன்று கலக்கப் போற்றி * நன்குகந்து வீறுரைத்தான் *
சென்ற துயர் மாறன் தீர்ந்து

தீர்ப்பாரிலாத * மயல் தீரக்கலந்த மால் *
ஓர்ப்பாதுமின்றியுடன் பிரிய ** நேர்க்க
அறிவழிந்து * உற்றாரும் அறக்கலங்கப் * பேர்கேட்டு
அறிவு பெற்றான் மாறன் சீலம்

சீலமிகு கண்ணன் * திருநாமத்தால் உணர்ந்து *
மேலவன்தன் மேனிகண்டு மேவுவதற்குச் ** சால
வருந்தி இரவும் பகலும் * மாறாமல் கூப்பிட்டு *
இருந்தனனே தென்குருகூர் ஏறு

ஏறு திருவுடைய * ஈசனுகப்புக்கு *
வேறுபடில் என்னுடைமை மிக்கவுயிர் ** தேறுங்கால்
என்தனக்கும் வேண்டா * எனு மாறன் தாளை நெஞ்சே! *
நந்தமக்குப் பேறாக நண்ணு

நண்ணாது மாலடியை * நானிலத்தே வல்வினையால் *
எண்ணாராத் துன்பமுறும் இவ்வுயிர்கள் ** தண்ணிமையைக்
கண்டிருக்க மாட்டாமல் * கண்கலங்கும் மாறன் அருள் *
உண்டு நமக்கு உற்ற துணையொன்று

‡ ஒன்றுமிலைத்தேவு * இவ்வுலகம் படைத்தமால் *
அன்றியென ஆருமறியவே ** நன்றாக
மூதலித்துப் பேசியருள் * மொய்ம்மகிழோன் தாள் தொழவே *
காதலிக்கும் என்னுடைய கை

கையாரும் சக்கரத்தோன் * காதலின்றிக்கே இருக்கப் *
பொய்யாகப் பேசும் புறனுரைக்கு ** மெய்யான
பேற்றை உபகரித்த * பேரருளின் தன்மைதனைப் *
போற்றினனே மாறன் பொலிந்து

‡ பொலிக பொலிகவென்று * பூமகள்கோன் தொண்டர் *
மலிவுதனைக் கண்டுகந்து வாழ்த்தி ** உலகில்
திருந்தாதார் தம்மைத் * திருத்திய மாறன் சொல் *
மருந்தாகப் போகும் மனமாசு

மாசறு சோதிக் * கண்ணன் வந்து கலவாமையால் *
ஆசை மிகுந்து பழிக்கஞ்சாமல் ** ஏசறவே
மண்ணில் மடலூர * மாறன் ஒருமித்தான் *
உண்ணநடுங்கத் தான் பிறந்த ஊர்

ஊரநினைந்த * மடல் ஊரவும் ஒண்ணாதபடிக் *
கூரிருள் சேர் கங்குலுடன் கூடி நின்று ** பேராமல்
தீதுசெய்ய மாறன் * திருவுள்ளத்துச் சென்ற துயர் *
ஓதுவதிங்கெங்ஙனேயோ?

எங்ஙனே நீர் முனிவது * என்னையினி? நம்பியழகு *
இங்ஙனே தோன்றுகின்றதென் முன்னே ** அங்ஙன்
உருவெளிப்பாடா * உரைத்த தமிழ் மாறன் *
கருதும் அவர்க்கின்பக்கடல்

கடல்ஞாலத்தீசனை * முன் காணாமல் நொந்தே *
உடனா அனுகரிக்கலுற்றத் ** திடமாக
வாய்ந்தனாய்த்தான் பேசும் * மாறன் உரையதனை *
ஆய்ந்துரைப்பார் ஆட்செய்ய நோற்றார்

நோற்ற நோன்பாதியிலேன் * உந்தனைவிட்டாற்றகில்லேன் *
பேற்றுக்கு உபாயம் உந்தன் பேரருளே சாற்றுகின்றேன் **
இங்கென்னிலையென்னும் * எழில் மாறன் சொல்வல்லார் *
அங்கமரர்க்காராவமுது

‡ ஆராவமுதாழ்வார் * ஆதரித்த பேறுகளைத் *
தாராமையாலே தளர்ந்துமிகத் ** தீராத
ஆசையுடன் ஆற்றாமை பேசி * அலமந்தான் *
மாசறு சீர் மாறன் எம்மான்

மாநலத்தால் மாறன் * திருவல்லவாழ் புகப்போய்த் *
தானிளைத்து வீழ்ந்தவவூர் தன்னருகில் ** மேல்நலங்கித்
துன்பமுற்றுச் சொன்ன * சொலவு கற்பார் தங்களுக்குப் *
பின்பறக்க வேண்டா பிற

பிறந்துலகம் காத்தளிக்கும் * பேரருட்கண்ணா! * உன்
சிறந்த குணத்தால் உருகும் சீலத் திறம் தவிர்த்து **
சேர்ந்தனுபவிக்கும் நிலை * செய்யென்ற சீர் மாறன் *
வாய்ந்த பதத்தே மனமே! வைகு!

வைகல் திருவண்வண்டூர் * வைகுமிராமனுக்கு * என்
செய்கைதனைப் புள்ளினங்காள்! செப்புமெனக் ** கைகழிந்த
காதலுடன் தூதுவிடும் * காரிமாறன் கழலே *
மேதினியீர்! நீர் வணங்குமின்

மின்னிடையார் சேர் கண்ணன் * மெத்தென வந்தானென்று *
தன்னிலை போய் பெண்ணிலையாய்த் தான்தள்ளி ** உன்னுடனே
கூடேனென்றூடும் * குருகையர்கோன் தாள்தொழவே *
நாள்தோறும் நெஞ்சமே! நல்கு

நல்லவலத்தால் நம்மைச் சேர்த்தோன் முன் நண்ணாரை *
வெல்லும் விருத்த விபூதியனென்று ** எல்லையறத்
தானிருந்து வாழ்த்தும் * தமிழ் மாறன் சொல்வல்லார் *
வானவர்க்கு வாய்த்த குரவர்

குரவை முதலாம் கண்ணன் கோலச் செயல்கள் *
இரவு பகல் என்னாமல் என்றும் ** பரவு மனம்
பெற்றேனென்றே களித்துப் * பேசும் பராங்குசன் தன் *
சொல் தேனில் செஞ்சே! துவள்

துவளறு சீர் மால் திறத்து * தொன்னலத்தால் * நாளும்
துவளறு தன் சீலமெல்லாம் சொன்னான் ** துவளறவே
முன்னம் அனுபவத்தில் * மூழ்கி நின்ற மாறனதில் *
மன்னும் உவப்பால் வந்த மால்

மாலுடனே தான் கலந்து * வாழப்பெறாமையால் *
சால நைந்து தன்னுடைமை தானடையக் கோலியே **
தானிகழ வேண்டாமல் * தன்னைவிடல் சொல் மாறன் *
ஊனமறு சீர் நெஞ்சே! உண்

உண்ணும் சோறாதி * ஒருமூன்றும் எம்பெருமான் *
கண்ணன் என்றே நீர் மல்கிக் கண்ணினைகள் ** மண்ணுலகில்
மன்னு திருக்கோளூரில் * மாயன்பால் போம் மாறன் *
பொன்னடியே நந்தமக்குப் பொன்

பொன்னுலகு பூமியெல்லாம் * புள்ளினங்கட்கே வழங்கி *
என்னிடரை மாலுக்கியம்புமென ** மன்னுதிரு
நாடுமுதல் * தூதுநல்கிவிடும் மாறனையே *
நீடுலகீர்! போய் வணங்கும் நீர்

நீராகிக் கேட்டவர்கள் * நெஞ்சழிய * மாலுக்கும்
ஏரார் விசும்பில் இருப்பரிதா ** ஆராத
காதலுடன் கூப்பிட்ட * காரிமாறன் சொல்லை *
ஓதிடவே உய்யுமுலகு

‡ உலகுய்யமால் நின்ற * உயர்வேங்கடத்தே *
அலர்மகளை முன்னிட்டவன்தன் மலரடியே **
வன்சரணாய்ச் சேர்ந்த * மகிழ்மாறன் தாளிணையே *
உன்சரணாய் நெஞ்சமே! உள்

உண்ணிலா ஐவருடனிருத்தி * இவ்வுலகில்
எண்ணிலா மாயன் * எனை நலிய எண்ணுகின்றான் **
என்று நினைந்தோலமிட்ட * இன்புகழ்சேர் மாறனெனக் *
குன்றிவிடுமே பவக்கங்குல்

‡ கங்குல் பகலரதி * கைவிஞ்சி மோகமுற *
அங்கதனைக் கண்டோர் அரங்கரைப் பார்த்து ** இங்கிவள்பால்
என்செய்ய நீரெண்ணுகின்றதென்னு * நிலைசேர் மாறன் *
அஞ்சொலுற நெஞ்சு வெள்ளையாம்

வெள்ளிய நாமம் கேட்டு * விட்டகன்றபின் மோகம் *
தெள்ளியமால் தென்திருப்பேர் சென்றுபுக ** உள்ளமங்கே
பற்றிநின்ற தன்மை * பகரும் சடகோபற்கு
அற்றவர்கள் தாம் ஆழியார்

ஆழிவண்ணன் தன்விசயம் * ஆனவை முற்றும் காட்டி *
வாழிதனாலென்று மகிழ்ந்து நிற்க ** ஊழிலவை
தன்னையின்றுபோல் கண்டு * தானுரைத்த மாறன் சொல் *
பன்னுவரே நல்லது கற்பார்

கற்றோர் கருதும் * விசயங்களுக்கெல்லாம் *
பற்றாம் விபவகுணப் பண்புகளை ** உற்றுணர்ந்து
மண்ணிலுள்ளோர் தம்மிழவை * வாய்ந்துரைத்த மாறன் சொல் *
பண்ணில் இனிதான தமிழ்ப்பா

பாமருவு வேதம் * பகர்மால் குணங்களுடன் *
ஆமழகு வேண்டப் பாடாமவற்றைத் ** தூமனத்தால்
நண்ணியவனைக் காண * நன்குருகிக் கூப்பிட்ட *
அண்ணலை நண்ணார் ஏழையர்

ஏழையர்கள் நெஞ்சை * இளகுவிக்கும் மாலழகு *
கூழவந்து தோன்றித் துயர்விளைக்க ** ஆழுமனம்
தன்னுடனே அவ்வழகைத் * தானுரைத்த மாறன் பால்
மன்னுமவர் தீவினைபோம் மாய்ந்து

மாயாமல் தன்னை வைத்த * வைசித்திரியாலே *
தீயாவிசித்திரமாச் சேர்பொருளோடோயாமல் **
வாய்ந்து நிற்கும் மாயன் * வளமுரைத்த மாறனை நாம் *
ஏய்ந்துரைத்து வாழு நாளென்று?

என்றனை நீ இங்கு வைத்தது * ஏதுக்கென * மாலும்
என்றனக்கும் என்தமர்க்கும் இன்பமதா ** நன்றுகவி
பாடவெனக் * கைம்மாறிலாமை * பகர்மாறன்
பாடணைவார்க்குண்டாமின்பம்

இன்பக்கவிபாடுவித்தோனை * இந்திரையோடு *
அன்புற்றுவாழ் திருவாறன் விளையில் ** துன்பமறக்
கண்டடிமைசெய்யக் * கருதியமாறன் கழலே *
திண்திறலோர் யாவர்க்கும் தேவு

தேவனுறைபதியில் * சேரப்பெறாமையால் *
மேவுமடியார் வசனாம் மெய்ந்நிலையும் ** யாவையும்தான்
ஆம்நிலையும் சங்கித்து * அவை தெளிந்த மாறன் பால் *
மாநிலத்தீர்! நங்கள் மனம்

நங்கருத்தை நன்றாக * நாடி நிற்கும் மாலறிய *
இங்கிவற்றில் ஆசை எமக்குளதென்? சங்கையினால் **
தன்னுயிரில் மற்றில் நசை * தானொழிந்த மாறன் தான் *
அந்நிலையை ஆய்ந்துரைத்தான் அங்கு

அங் அமரர் பேண * அவர் நடுவே வாழ் திருமாற்கு *
இங்கோர் பரிவரிலையென்றஞ்ச ** எங்கும்
பரிவருள ரென்னப் * பயம் தீர்ந்த மாறன் *
வரிகழல் தாள் சேர்ந்தவர் வாழ்வார்

வாராமல் அச்சமினி * மால் தன் வலியினையும் *
சீரார் பரிவருடன் சேர்த்தியையும் ** பாருமெனத்
தானுகந்த மாறன் தாள் * சார்நெஞ்சே! சாராயேல் *
மானிடவரைச் சார்ந்துமாய்

மாயன் வடிவழகைக் * காணாத வல்விடாயாய் *
அறவிஞ்சியமுதலற்றும் ** தூயபுகழ்
உற்ற சடகோபனை * நாமொன்றி நிற்கும்போது பகல் *
அற்ற பொழுதானதெல்லியாம்

எல்லி பகல் நடந்த * இந்த விடாய் தீருகைக்கு *
மெல்லவந்து தான் கலக்க வேணுமென ** நல்லவர்கள்
மன்னு கடித்தானத்தே * மாலிருக்க மாறன் கண்டு *
இந்நிலையைச் சொன்னானிருந்து

இருந்தவன் தான்வந்து * இங்கிவரெண்ணமெல்லாம் **
தருந்தவிவர் தந்திறத்தே செய்து ** பொருந்தக்
கலந்தினியனாயிருக்கக் * கண்ட சடகோபர் *
கலந்த நெறி கட்டுரைத்தார் கண்டு

கண்ணிறையவந்து * கலந்தமால் இக்கலவி *
திண்ணிலையாவேணும் எனச்சிந்தித்துத் ** தண்ணிதெனும்
ஆருயிரினேற்றம் * அதுகாட்ட ஆய்ந்துரைத்தான் *
காரிமாறன் தன் கருத்து

கருமால் திறத்தில் * ஒருகன்னிகையாம் மாறன் *
ஒருமா கலவி  உரைப்பால் ** திரமாக
அந்நியருக்காகாது * அவன் தனக்கே ஆகுமுயிர் *
இந்நிலையை ஓர் நெடிதா

‡ நெடுமாலழகு தனில் * நீள் குணத்தில் * ஈடு
படுமா நிலையுடைய பத்தர்க்கு ** அடிமைதனில்
எல்லை நிலம் தானாக * எண்ணினான் மாறன் * அது
கொல்லை நிலமான நிலை கொண்டு

கொண்ட பெண்டிர்தாம் முதலாக் * கூறும் உற்றார் தன்மத்தால் *
அண்டினவரென்றே அவரைவிட்டுத் ** தொண்டருடன்
சேர்க்கும் * திருமாலைச் சேருமென்றான் * ஆர்க்கும் இதம்
பார்க்கும் புகழ்மாறன் பண்டு

பண்டையுறவான பரனைப் * புளிங்குடிக்கே
கண்டு * எனக்கெல்லாவுறவின் காரியமும் ** தண்டற நீ
செய்தருளென்றேயிருந்த * சீர்மாறன் தாளிணையை *
உய்துணையென்றுள்ளமே! ஓர்

ஓராநீர் வேண்டினவை * உள்ளதெல்லாம் செய்கின்றேன் *
நாராயணனன்றோ நானென்று ** பேருறவைக்
காட்ட * அவன் சீலத்தில் கால்தாழ்ந்த மாறன் அருள் *
மாட்டிவிடும் நம்மனத்துமை

மையார்கண் மாமார்பில் * மன்னும் திருமாலைக் *
கையாழி சங்குடனே காணவெண்ணி ** மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக் * கண்டுகந்த மாறன்பேர் *
ஓத உய்யுமே இன்னுயிர்

இன்னுயிர் மால் தோற்றினது * இங்கென்னெஞ்சிலென்று *
கண்ணால் அன்றவனைக் காணவெண்ணி ஆண்பெண்ணாய் **
பின்னையவன் தன்னை நினைவிப்பவற்றால் * தான் தளர்ந்த
மாறனருள் * உன்னுமவர்க்கு உள்ளம் உருகும்

உருகுமால் என்னெஞ்சம் * உன்செயல்களெண்ணிப் *
பெருகுமால் வேட்கையெனப்பேசி ** மருவுகின்ற
இன்னாப்புடனவன் சீர் * ஏய்ந்து உரைத்த மாறன் சொல் *
என்னாச் சொல்லாதிருப்பதெங்கு?

எங்காதலுக்கடி * மாலேய்ந்த வடிவழகென்று *
அங்காது பற்றாசா ஆங்கவன்பால் ** எங்குமுள்ள
புள்ளினத்தைத் * தூதாகப்போகவிடும் மாறன் தாள் *
உள்ளினர்க்குத் தீங்கையறுக்கும்

அறுக்குமிடரென்று * அவன்பால் ஆங்குவிட்ட தூதர் *
மறித்துவரப்பற்றாமனத்தால் ** அறப்பதறிச்
செய்ய திருநாவாயில் * செல்ல நினைந்தான் மாறன் *
மையலினால் செய்வறியாமல்

மல்லடிமை செய்யும் நாள் * மால் தன்னைக்கேட்க * அவன்
சொல்லுமளவும் பற்றாத் தொன்னலத்தால் ** செல்கின்ற
ஆற்றாமை பேசி * அலமந்த மாறன் அருள் *
மாற்றாகப் போகுமென் தன்மால்

‡ மால் உமது வாஞ்சை முற்றும் * மன்னுமுடம்பின் முடிவில் *
சால நண்ணிச் செய்வனெனத் தானுகந்து ** மேல் அவனைச்
சீரார் கணபுரத்தே * சேருமெனும் சீர் மாறன் *
தாரானோ நந்தமக்குத்தாள்

தாளடைந்தோர் தங்கட்குத் * தானே வழித்துணையாம் *
காளமேகத்தைக் கதியாக்கி ** மீளுதலாம்
ஏதமிலா விண்ணுலகில் * ஏகவெண்ணும் மாறனென *
கேதமுள்ள தெல்லாம் கெடும்

கெடுமிடர் வைகுந்தத்தைக் * கிட்டினார் போல் *
தடமுடையனந்த புரந்தன்னில் ** படவரவில்
கண்டுயில்மாற்காட் செய்யக் * காதலித்தான் மாறன் * உயர்
விண்தனிலுள்ளோர் வியப்பவே

வேய்மருதோளிந்திரைகோன் * மேவுகின்ற தேசத்தைத் *
தான்மருவாத் தன்மையினால் ** தன்னையின்னம் பூமியிலே
வைக்குமெனச் சங்கித்து * மால்தெளிவிக்கத் தெளிந்த *
தக்கபுகழ் மாறன் எங்கள் சார்வு

சார்வாகவே அடியில் * தானுரைத்த பத்திதான் *
சீரார் பலத்துடனே சேர்ந்ததனைச் ** சோராமல்
கண்டுரைத்த மாறன் * கழலிணையே நாடோறும் *
கண்டுகக்கும் என்னுடைய கண்

கண்ணன் அடியிணையில் * காதலுறுவார் செயலைத் *
திண்ணமுறவே சுருங்கச் செப்பியே ** மண்ணவர்க்குத்
தான் உபதேசிக்கை * தலைக்கட்டினான் மாறன் *
ஆனபுகழ் சேர் தன்னருள்

அருளால் * அடியிலெடுத்த மாலன்பால் *
இருளார்ந்த தம்முடம்பை இச்சித்து ** இருவிசும்பில்
இத்துடன் கொண்டேக * இவரிசைவு பார்த்தே இருந்த *
சுத்தி சொல்லும் மாறன் செஞ்சொல்

செஞ்சொற் பரன் தனது * சீராரும் மேனி தனில் *
வஞ்சித்துச் செய்கின்ற வாஞ்சை தனின் ** விஞ்சுதலைக்
கண்டவனைக் கால்கட்டிக் * கைவிடுவித்துக் கொண்ட *
திண்திறல் மாறன் நம் திரு

திருமால் தன்பால் * விருப்பம் செய்கின்ற நேர்கண்டு *
அருமாயத்தன்ற கல்விப்பானென் ** பெருமால் நீ
இன்றென்பால் செய்வானென்னென்ன * இடருற்று நின்றான் *
துன்னுபுகழ் மாறனைத் தான் சூழ்ந்து

‡ சூழ்ந்து நின்ற மால் விசும்பில் * தொல்லைவழி காட்ட *
ஆழ்ந்ததனை முற்றும் அநுபவித்து ** வாழ்ந்து அங்கு
அடியருடனே * இருந்தவாற்றை உரை செய்தான் *
முடிமகிழ்சேர் ஞானமுனி

‡ முனிமாறன் முன்புரைசெய் * முற்றின்பம் நீங்கித் *
தனியாகி நின்று தளர்ந்து ** நனியாம்
பரமபத்தியால் நைந்து * பங்கயத்தாள் கோனை *
ஒருமையுற்றுச் சேர்ந்தான் உயர்ந்து

‡ உயர்வே பரன்படியை * உள்ளதெல்லாம் தான் கண்டு *
உயர்வேதம் நேர்கொண்டுரைத்து ** மயர்வேதும்
வாராமல் * மானிடரை வாழ்விக்கும் மாறன் சொல் *
வேராகவே விளையும் வீடு

**வேங்கடகுரவே நம:**
**அண்ணாவிலப்பன் திருவடிகளே சரணம்**
**ஸ்ரீ முதலியாண்டான் ஸ்வாமி திருவடிகளே சரணம்**
**ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்**